Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.125/2016

Dated 18-03-2026
Deposition of witness for : PW 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கூத்தரசன் | வயது | : | 46 |
| தந்தை பெயர் | : | இருளாண்டி | தாலுக்கா | : | பாபநாசம் |
| கிராமம் | : | மெலட்டூர் | தொழில் | : | கூலி வேலை |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused 2,4,6,8, absent 355 BNSS petition filed and allowed. A3,5 present.**

**A1 died.**

**Counsel Present**

**As per the Circular of the Hon’ble High Court, Madras in ROC No. 74663/2024 /F1/dt.21.2.2025 the Identity of the witness verified with their Identity card.**

**Aathar card of the Witness verified.**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடும்பத்தோடு வசித்து வருகிறேன்.

2) எதிரிகளை தெரியும்.

3) 25.5.2014 ம் தேதி மாலை 5.30 மணியளவில் நான் மெலட்டூரில் உள்ள எனது மாமா அழகர் டீ கடையில் டீ போட்டுகொண்டிருந்தேன். அப்போது பக்கத்தில் உள்ள முருகேசன் என்பவர் பெட்டிக்கடையில் அகரமாங்குடியை சேர்ந்த சந்தோஷ், ஆனந்த், மகாதேவன்,பிரதிப், சுரேஷ் , வினோத், பாலாஜி, கார்த்திக் ஆகியோர்கள் அருவாள், கட்டையுடன் வந்து பெட்டிகடைக்கு வந்து நீ என்ன பெரிய ஆளா, பால்கேட்டா கொடுக்கமாட்டியா என கேட்டு சந்தோஷ் என்பவர் என் மாமா முருகேசை அருவாளால் வெட்டினார். என் மாமாவுக்கு தலையில் காயம் ஏற்பட்டது. நான் போய் தடுத்தேன். அப்போது ஆனந்த் என்பவர் நீ என்ன பெரிய ஆளா நீ என்ன தடுக்கிறது என்று சொல்லி என்னை என் இடது கை விரல்கள் மற்றும் வலது கை, இடது தொடை, தோள்பட்டை ஆகிய இடங்களில் வெட்டினார். கூலி வேலை பார்த்துவிட்டு வந்த ஆறுமுகம் மாமா, அழகர் மாமா வந்து தடுத்தார்கள். ஆறுமுகம் மாமாவை மகாதேவன் என்பவர் தலையிலேயே வெட்டிவிட்டார். பக்கத்தில் இருந்த தடுக்க வந்த அழகர் மாமாவை சந்தோசும், பிரதிப் இருவரும் ஆளுக்கொரு அருவாளால் அழகர் மாமாவின் இடது கை, இடது தோள், இடது கால் விரல் பகுதி ஆகிய இடங்களில் வெட்டினார்கள். வெட்டியவுடன் சந்தோஷ், மகாதேவன், பிரதிப் ஆகியோர் என் மாமா முருகேசன் பெட்டிகடையை உடைத்தார்கள். அழகர் மாமாவை கார்த்தி, பாலாஜி, சுரேஷ், வினோத் ஆகியோர் கட்டையால் அடித்தார்கள். நாங்கள் சத்தம்போடவும் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் ஓடி வந்து தடுத்தார்கள்.

4) எங்களை யாராவது புடிக்க நினைத்தால் பிடிப்பவர்களை கொலை செய்துவிடுவோம் என மிரட்டினார்கள். சந்தோஷ் என்பவருடைய இரு சக்கர வண்டியில் இரண்டுபேரும், மகாதேவன் வண்டியில் ஒரு ஆளும் ஏறி அகரமாங்குடி போய்விட்டார்கள். எங்களை மெலட்டுர் அரசு மருத்துவமனைக்கு முதல் சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். அங்கிருந்து 108 க்கு போன் செய்து தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக சேர்த்தார்கள்.

5) அங்கு சிகிச்சையில் இருந்தபோது 30.5.2014 அன்று சிகிச்சை பலன் இன்றி ஆறுமுகம் மாமா இறந்துவிட்டார்.

6) எங்களை வெட்டிய அருவாளை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். என்னிடம் காட்டப்படும் மரப்பிடி போட்ட அருவாளால்தான் என்னை வெட்டினார்கள். அந்த அருவாள்தான் இது . அது **அ.சா.பொ.2** ஆகும். ( அ.சா.பொ.1 வரிசையில் உள்ள 5 அருவாள்களில் ஒன்றை அடையாளம் காட்டியதால் அந்த அடையாளம் காட்டிய அருவாள் மட்டும் சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

7)இது சம்பந்தமாக போலீசார் என்னை மறுநாள் விசாரித்தார்கள்.

**அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1)எனக்கு மது சாப்பிடும் பழக்கம் உண்டு என்றால் இல்லை. முன்னாடி ஒரு காலத்தில் இருந்தது. சம்பவத்தன்று நான் மது சாப்பிடவில்லை.

2) மருத்துவமனையில் சேர்ந்தபோது மருத்துவரிடம் அடையாளம் தெரிந்த நபர்கள்தான்

வெட்டியதாக கூறினேன் என்றால் சரிதான். என்னை வெட்டிய நபர் அகரமாங்குடியை சேர்ந்தவர் என்று மருத்துவரிடம் சொன்னேன் என்றால் சரிதான்.

3) மருத்துவர் என்னை முதலில் விசாரித்தபோது அடையாளம் தெரியாத 11 நபர்கள் வெட்டியதாக சொன்னேன் என்றால் சரிதான்.

4) சம்பவத்தன்று நான் குடிபோதையில் இருந்தேன் என்று சொன்னால் சரியல்ல.

5) நான் தெற்கு தெரு பாபநாசத்தில் குடியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் மெலட்டுரில் வசிக்கிறேன்.

6) சம்பவம் நடந்த இடத்திற்கும் பாபநாசத்திற்கும் சுமார் 8 கி.மீ. தூரம் இருக்கும் என்றால் சரிதான்.

7) என்னை மருத்துவர் விசாரிக்கும்போது தெற்குதெரு பாபநாசத்தில் குடியிருக்கிறேன் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.

8) சம்பவம் நடந்தது குச்சிபாளையம் என்று ஊர் ஆகும். அந்த ஊரில் இருந்து பாபநாசம் தெற்கு தெரு என்பது 8 கி.மீ. தூரம் என்றால் சரிதான். நான் சம்பவ காலத்தில் தெற்கு தெரு பாபநாசத்தில்தான் குடியிருந்தேன் என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

9) சம்பவ இடத்தில் இருந்து வடக்குமாங்குடி 4 கி,மீ, சீத்தார்காடு 5 கி.மீ. தூரம் என்றால் சரிதான்.

10) ஆறுமுகம் இறந்தபிறகுதான் போலிசார் என்னை முதன் முதலில் விசாரித்தார்கள்

என்றால் சம்பவம் அன்றே என்னை முதல் முதலில் விசாரித்தார்கள்.

11) என்னை வெட்டிய நபரின் அங்க அடையாளம் மற்றும் வயது என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான். என்னை வெட்டியது ஒருவர்தான்.

12) இந்த வழக்கில் போலிசார் எதிரிகளை பொறுத்து அடையாளம் அணிவகுப்பு நடத்தினார்களா என்றால் இல்லை. சிறைசாலையில் நடத்தவில்லை. நீதிமன்றத்தில்தான் நான் பார்த்தேன்.

13) அ.சா.பொ.2 அருவாளை காட்டி என்னை போலிசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். அவ்வாறு விசாரித்தபோது மரப்பிடி போட்ட அருவாளால்தான் வெட்டியதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

14) நான் மதுபோதையில் சம்பவத்தன்று இருந்தேன் என்றும் அதனால் என்னை வெட்டியதும் என் மாமாவை வெட்டியதும் யார் என்றே எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் அ.சா.பொ.2 மரப்பிடிபோட்ட அருவாளால் என்னை வெட்டினார்கள் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

15) என்னை வெட்டிய நபர் நீ என்ன பெரிய ஆளா என்று சொல்லி வெட்டியதாக போலிசார் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன்.

16) எங்களை யாராவது புடிக்க நினைத்தால் பிடிப்பவர்களை கொலை செய்துவிடுவோம் என மிரட்டினார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லிஉள்ளேன்.

17) அ.சா.1, முருகேசன், அ.சா.2 அழகர் இறந்துபோனஆறுமுகம் ஆகியோர்கள் என்னுடைய

தாய்மாமா ஆவார்கள்.

18) அ.சா.1, முருகேசன், அ.சா.2 அழகர் இறந்துபோனஆறுமுகம் ஆகியோர்கள் என் உறவினர்கள் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

19) என்னை யாரும் இரும்பு கம்பியால் தாக்க வில்லை. அருவாளால்தான் வெட்டினார்கள். மருத்துவரிடம் இரும்பு கம்பியால் என்னை தாக்கியதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

மறு விசாரணை

இல்லை.

VELMURUGAN P

Digitally signed by VELMURUGAN P
Date: 2026.03.18 14:25:05 +0530